**வணிக வழக்குக்கான சார்பு நீதிமன்றம்,**
**ÿ னிவாசபுரம், காந்திபுரம்,**
**கோயம்புத்தூர்.**

C.O.S.No. 256 Of 2025

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11- வது நாள் புதன்கிழமை 1969 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் **திரு.சி.பி.வேதகிரி.,பி.பார்ம்.,எம்எஸ்-ஐடி(ஆஸ்திரேலியா).,எல்எல்எம்.,** நீதிபதி, வணிக நீதிமன்றம், (சார்பு நீதிபதி), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | எம்.அரவிந்த் | கிராமம்: | |
| க.பெ. (அ)<br>த.பெ. | மகாலிங்கம் | வேலை: | உரிமையாளர்,<br>Aravind Engineering works,<br>கோயமுத்தூர். |
| வயது | 50 | செல்போன் எண் | |

பி.வா.சா.1 **எம்.அரவிந்த்** ஆக 11.03.2026 அன்று ஆஜராகி

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் 2-ம் பிரதிவாதி. எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை எழுத்துபூர்வமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் உண்மைதான்.சங்கதிகளை நான் அறிவேன். நிரூபண

வாக்குமூலத்தில் நான் கையொப்பமிட்டுள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

வாதி வங்கியிடம் உங்கள் நிறுவனத்திற்கு வேண்டி வணிக கடன் வாங்கியிருந்தீர்கள் என்று சொன்னால் சரிதான். வா.சா.1, 2, 4 முதல் வா.சா.13 வரையுள்ள ஆவணங்களில் உள்ள கையொப்பம் உங்களுடையது என்று சொன்னால் சரிதான். விவசாயம் ஆண்டுதோறும் நடைபெறும் தொழில் தான் என்றால் சரிதான், கால சூழ்நிலைக்கேற்றாற்போல் விவசாயம் செய்யப்படும். விவசாயப் பொருட்கள் உற்பத்தி அல்லாது நீங்கள் பேப்பர்தட்டு மற்றும் விவசாய உதிரி பாகங்கள் விற்பனை செய்து வந்தீர்கள் என்று சொன்னால் சரிதான், விவசாயத்தில் நிரந்தர வருமானம் இல்லாத காரணத்தினால் அதை செய்து வந்தேன். பிரமாண வாக்குமூலத்தில் நீங்கள் தாவா கடனை செலுத்த ஒப்புக்கொள்வதாகவிம் கால அவகாசம் கோரியுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான், என்னுடைய பேப்பர்தட்டு தொழில் முற்றிலுமாக தடை செய்யப்பட்டுவிட்டது அதில் செய்திருந்த முதலீடு முடங்கி போய்விட்டது. வாதி வங்கி உங்களுக்கு பேப்பர்தட்டு செய்யும் பொருட்டு கடன் அளிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, பேப்ரிகேசன் மற்றும் பேப்பர்தட்டு தொழிலுக்கு சேர்த்துதான் கடன் வழங்கப்பட்டது. நீங்கள் சொல்வது போல் உங்களுடைய பேப்பர்தட்டு தொழில் நஷ்டம் ஆன விபரங்களை உங்களது பிரமாண வாக்குமூலத்திலோ அல்லது எதிர்உரையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி வங்கியிடம் நீங்கள் வாங்கிய கடனை செலுத்த தாவா பிரதிவாதிகள் கடமைப்பட்டவர்கள் என்று சொன்னால் சரியல்ல.

CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI

Digitally signed by CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI
Date: 2026.03.11 18:16:00 +0530

Judge,
Commercial Court,
(Senior Civil Judge Cadre),
Coimbatore.